நாட்டுக்கோழி வளர்ப்பில் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளும் அதன் தீர்வுகளும்

பா. பாலமுருகன், உதவிப் பேராசிரியர், உழவர் பயிற்சி மையம், தேனி 625 531

நாட்டுக்கோழி நம் முன்னோர்களால் தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது நாட்டுக்கோழிகளை தீவிர முறையில் அடைத்து வைத்து வளர்க்கப்படுவதையும் பெருமளவு காண முடிகிறது. கிராமப்புறத்தில் வசித்து வரும் 89 விழுக்காடு மக்களின் புரதத் தேவையையும் பொருளாதார நிலையையும் உயர்த்துவதில் நாட்டுக்கோழிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் உள்ள மொத்த கோழியினங்களில் 25 விழுக்காடு நாட்டுக்கோழிகள் ஆகும். இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த முட்டை உற்பத்தியில் 21 விழுக்காடு முட்டைகள் நாட்டுக்கோழிகள் மூலமாக பெறப்படுகிறது. இத்தகைய சிறப்புகள் மற்றும் மக்கள் மத்தியில் நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றால் நாட்டுக்கோழி வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டாலும் ஒரு சில நடைமுறை சிக்கல்கள் நாட்டுக்கோழி வளர்ப்பில் தடைகற்களாக அமைகின்றன. உதாரணமாக

- கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்ளுதல்.
- நாட்டுக்கோழி நோய்கள்.
- புற ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பிரச்சனைகள்.
- கோழி வளர்ப்பிற்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்கள்.
- விற்பனை செய்வதில் ஏற்படும் பிரச்சனைகள்.
- கழுகு மற்றும் பருந்து ஆகியவைகளுக்கு கோழி குஞ்சுகள் இரையாகுதல்.
- குறைந்த உற்பத்தி திறன்.
- முட்டை சேகரித்தல் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை.
- அதிக அளவிலான தோல் முட்டைகள் உருவாகுதல்.
- நாட்டுக்கோழி பராமரிப்பு விழிப்புணர்வின்மை
- இதர பிரச்சனைகள் என நிறைய காரணங்களை சொல்லலாம்.

1. கோழிகள் ஒன்றையொன்று கொத்திக் கொள்ளுதல்

பொதுவாக ஒங்கிய பண்பு கொண்ட கோழிகள் ஒடுங்கிய பண்பு கொண்ட கோழிகளை கொத்துதல் மற்றும் மற்ற கோழிகளிடமிருந்து பழகிகொள்ளுதல் ஆகியவற்றில் கோழிகள் ஒன்றையொன்று கொத்திக்கொள்ளுதல் காணப்படும். கால் கொத்துதல், இறகு பிடுங்குதல், தலையில் கொத்துதல் மற்றும் ஆசன வாய் பகுதியில் கொத்துதல் என அவை கொத்தும் இடத்தை பொறுத்து காணப்படும். இவற்றில் இறகு கொத்துதலால் விற்பனை வாய்ப்பு குறைதல் மற்றும் ஆசான வாய் பகுதியில் கொத்துதலால் இறப்பும் ஏற்படுவதால் அதிக இழப்பீடு ஏற்படுகிறது.

காரணங்கள்:

❖ **தீவனம் சார்ந்த குறைபாடுகள்**

- கோழிகளுக்கு தேவையான தீவனம் பற்றாக்குறை.
- போதுமான தீவன இடவசதியின்மை
- புரதம், மெத்தியோனின், சோடியம் மற்றும் பாஸ்பரஸ் சத்து குறைபாடு
- தீவனத்தில் அதிகமான மாவு சத்து மற்றும் குறைவான நார் சத்து உள்ள தீவனமிடும் போது தோலுக்கு அடியில் அதிகளவில் கொழுப்பு படிந்து தோலினுடைய தன்மையை பாதித்து இறகு வளர்வதைப் பாதிக்கும்.
- உப்பு குறைபாடு.

- அதிக விழுக்காடு குருணை வடிவ தீவனத்தை பயன்படுத்துவதால் தீவனம் உண்ணுவதற்கு குறைந்த நேரத்தை எடுத்துக்கொள்ளும். மீதி இருக்கும் நேரத்தில் மற்ற கோழிகளை கொத்தும்.

❖ **பராமரிப்பு குறைபாடுகள்**

- வெவ்வேறு வயதுடைய கோழிகளை ஒன்றாக அடைத்து வைத்து வளர்த்தல்.
- அக மற்றும் புற ஒட்டுண்ணிகளின் தாக்கம்.
- தீவன மற்றும் பண்ணை பராமரிப்பில் ஏற்படுத்தப்படும் திடீர் மாற்றங்கள்.

❖ **பண்ணை குறைபாடுகள்**

- குறைந்த இடவசதியில் அதிக கோழிகள் வளர்த்தல்.
- தீவிர முறையில் நாட்டுக்கோழிகளை அடைத்து வைத்து வளர்த்தல்.

தடுப்பு முறைகள்:

1. நாட்டுக் கோழியை பொறுத்தவரையில் பண்ணைக்குள் அடைத்து வளர்க்கும் முறை உகந்ததல்ல. முழு சரிவிகித தீவனம் நாட்டுக்கோழிகளுக்கு கொடுக்கப்பட்டாலும் கூட கோழிகளை புறக்கடையில் மேய்ச்சலுக்கு அனுப்புவதே உகந்தது.
2. இயற்கை முறையில் வளரும் பொழுது கோழிகள் 50 முதல் 90 விழுக்காடு பகல் நேரங்களில் பச்சை தீவனம் உண்பதில் அதிக நேரம் செலவிடுகிறது. எனவே, கோழிகளை அடைத்து வைக்காமல் புறக்கடையில் பச்சை புல் மற்றும் அதிக நார் சத்துள்ள தீவனம் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும்.
3. கோழிகள் ஒன்றையொன்று கொத்திக்கொள்ளுவதால் சிலர் கோழிகளின் மூக்கை வெட்டுவர். அவ்வாறு செய்யும்பொழுது கோழிகளின் விற்பனை வாய்ப்பு மிகவும் பாதிக்கப்படும்.
4. சரிவிகித தீவனம் மற்றும் சத்து குறைபாடுகள் இல்லாத முறையான சரிவிகித தீவனம் அளிக்கப்பட வேண்டும்.
5. தாது உப்புக் கலவை மற்றும் வைட்டமின்கள் ஆகியவற்றை தீவனத்தில் சரியான விகிதத்தில் கலந்து கொடுப்பதன் மூலம் இப்பிரச்சனையை குறைக்கலாம்.
6. கோழிகளுக்குத் தேவையான இடவசதியை அதன் வளர் பருவத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டும்.
7. முடிந்த அளவு ஒரே வயதுடைய கோழிகளை தனிதனியே குழுவாக வளர்க்க முற்படவேண்டும்.
8. குருணை வடிவ தீவனத்தை காட்டிலும் மாவு போன்ற தீவனத்தை கொடுப்பதன் மூலம் கோழிகள் மாவு போன்ற தீவனத்தை உண்ணுவதற்கு அதிக நேரம் செலவிடுவதால் மற்ற கோழிகளை கொத்துவதை குறைக்க முடியும்.
9. சாதாரண உப்பை ஒரு லிட்டர் தண்ணீரில் 500 மி.கி முதல் ஒரு கிராம் என்ற அளவில் கலந்து அளிப்பதன் மூலம் கோழிகள் கொத்துவதை குறைக்கலாம்.

2. நாட்டுக்கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள்

பொதுவாக பண்ணைக் கோழிகளுக்கு வரும் அனைத்து நோய்களும் நாட்டுக்கோழிகளையும் தாக்கக்கூடியதாகும். ஆனால், நம் நாட்டுக்கோழிகளில் காணப்படும் இயற்கையான நோய் எதிர்ப்புத் திறனால் அனைத்து நோய்களாலும் பாதிக்கப்படுவதில்லை. இருந்த போதிலும் சில விதமான தொற்று நோய்கள் குறிப்பாக வெள்ளைக்கழிச்சல் நோய், அம்மை நோய் மற்றும் இரத்தக்கழிச்சல் ஆகிய நோய்கள் கோழிகளை அதிகம் தாக்கி இறப்பினை ஏற்படுத்தும். வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு எதிராக தடுப்பூசியை அருகிலுள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் வாரா வாரம் சனிக்கிழமைகளில் இலவசமாக போட்டுக்கொள்ளலாம். ஒவ்வொரு வருடமும் தவறாமல் இலவச கோழிக்கழிச்சல் தடுப்பூசி

முகாமை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நோய் கண்ட நிலையில் மூலிகை முதலுதவி மருத்துவம் செய்வது நல்ல பலனை கொடுக்கும்.

பெரும்பாலும் நுண்ணுயிரி கிருமிகள் தண்ணீர் மற்றும் தீவனம் மூலமாக பரவுவதால் சுத்தமான தண்ணீரையும் மற்றும் தீவனத்தையும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு இல்லையெனில் இளம் குஞ்சுகளுக்கு கோலிசெப்டிசீமியா மற்றும் சுவாச நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் சிகிச்சை அளிக்க வேண்டும்.

நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் கோழி கூண்டுகளை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்தல், கோழிகளை அடைக்கும் இடங்களில் உள்ள எச்சத்தை தினமும் நீக்குதல், நோய் வாய்ப்பட்ட கோழிகளை பிரித்து மற்ற கோழிகளுக்கு நோய் பரவுதலை தடுத்தல் மற்றும் குஞ்சுகளுக்கு முறையான தடுப்பூசி அளித்து பராமரிப்பதன் மூலம் இறப்பை குறைக்க முடியும்

3.நாட்டுக்கோழிகளில் புற ஒட்டுண்ணிகளின் தாக்கம்

நாட்டுக்கோழிகளை பலவகையான வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்கினாலும் பேன்களும், தெள்ளுப்பூச்சிகளும் அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதிகம் பாதிக்கப்பட்ட கோழிகளில் தோல் அரிப்பு, இறகு உதிர்தல், இரத்த சோகை மற்றும் முட்டை உற்பத்தி குறையவும் வாய்ப்புள்ளது. பெரும்மாலும் அடை வைத்த கோழிகளில் புற ஒட்டுண்ணிகளின் தாக்கம் சற்று அதிகம் காணப்படும். சில சமயங்களில் வீட்டில் உள்ளவர்களுக்கும் இந்த ஒட்டுண்ணிகளினால் தொந்தரவாக இருக்கும்.

இவற்றை ஒழிக்க கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் தகுந்த தடுப்பு மருந்துகளை உபயோகப்படுத்தி கோழிகளுக்கு மருந்து குளியல் அளிக்க வேண்டும். மேலும் தண்ணீர் மற்றும் தீவனத்தில் பூச்சிக்கொல்லிகளின் நச்சு கலக்காதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும். சலித்த சாம்பல் 100 கிராம், வசம்பு பொடி 25 கிராம் மற்றும் மஞ்சள் தூள் 10 கிராம் ஆகியவற்றை கலந்து கோழியின் மேல் இறகுகளை விலக்கி தூவ வேண்டும் அல்லது சீத்தா பழ இலை மற்றும் விதையின் தூள்கள் கோழிகளின் மேல் தூவதன் மூலம் புற ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தலாம். மேலும் பண்ணைகளில் காணப்படும் ஓட்டை மற்றும் சந்துகளில் புற ஒட்டுண்ணிகள் அதிகம் காணப்படும்போது மருந்து குளியலில் உபயோகப்படுத்தப்படும் கரைசலை கோழிகள் மேய்ச்சலுக்கு சென்ற பின்பு பண்ணையில் தெளிப்பதன் மூலம் புற ஒட்டுண்ணிகளை கட்டுப்படுத்தலாம். எனவே, நாட்டுக்கோழி வளர்ப்போர் மேற்கூறிய பராமரிப்பு முறைகளை பின்பற்றினால் கோழிகளை தாக்கும் புற ஒட்டுண்ணிகளின் பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

4. கோழி வளர்ப்பிற்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில் உள்ள சிரமங்கள்

தடுப்பூசி

நாட்டுக்கோழி நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகள் பெரும்பாலான இடங்களில் கிடைப்பதில்லை. கிராமப்புறங்களில் புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்றவாறும் (20 முதல் 50 வரை) தடுப்பூசிகள் கிடைப்பதில்லை. மேலும் 200 முதல் 500 வரையிலான கோழிகளுக்கு போடக்கூடிய தடுப்பூசிகளே கிடைப்பதால் பொரும்பாலான பண்ணையாளர்கள் அதை குறைந்த எண்ணிக்கையில் உள்ள கோழிகளுக்கு பயன்படுத்துவதில்லை. அவ்வாறு பயன்படுத்தினாலும் தடுப்பூசி சேமிப்பு முறை மற்றும் பயன்படுத்தும் முறை பற்றிய விழிப்புணர்வும் குறைவாக இருக்கிறது. இதறகென சிறிய பண்ணையாளர்களுக்கு ஏற்றவாறு தானுவாஸ் இரானிக்கெட் குருணை வடிவ தடுப்பு மருந்தினை அனைத்து தானுவாஸ் பயிற்சி மையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். தடுப்பூசி சேமிப்பு முறை மற்றும் பயன்படுத்தும் முறை பற்றியும் பயிற்சி மையங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

தீவனம்

புறக்கடை நாட்டுக்கோழி வளர்ப்பில் பண்ணையாளர்கள் தங்களிடம் உள்ள தானியங்களை தீவனமாக கொடுக்கின்றனர். நாட்டுக்கோழிகளுக்கென சமச்சீரான தீவனம் கொடுக்கப்படாத காரணத்தினால் புரதச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டு முட்டை எண்ணிக்கை மற்றும் உடல் எடை குறைகிறது. வறட்சி மற்றும் தீவன மூலப்பொருட்களின் விலையேற்றம் இதற்கு மிக முக்கிய காரணமாக அமைகிறது. நாட்டுக்கோழி பண்ணையாளர்கள் இறைச்சிக்கோழி தீவனம் மற்றும் முட்டைக்கோழி தீவனத்தையே நாட்டுக்கோழிகளுக்கும் உபயோகிக்கின்றனர். இதன் விலையும் சற்று அதிகமாக இருப்பதால் கோழிகளின் உற்பத்தி செலவும் அதிகமாகிறது. எனவே தானுவாஸ் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள தீவன ஆலைகளில் நாட்டுக்கோழிகளுக்கென பிரத்யோக தீவனத்தை பெற்றுக்கொள்ளலாம். பண்ணையாளர்கள் புரதச்சத்து பற்றாக்குறையை அசோலா வளர்த்து கோழிகளுக்கு கொடுப்பதன் மூலம் ஓரளவு புரதச்சத்து பற்றாக்குறையை குறைக்கலாம்.

தரமான நாட்டுக் கோழிக் குஞ்சுகள்:

தற்போதைய சூழ்நிலையில் தரமான நாட்டுக்கோழிக் குஞ்சுகள் கிடைப்பது சற்று அரிதாகவும் அதன் விலையும் அதிகமாகவும் இருக்கின்றன.

5. விற்பனை செய்தலில் உள்ள பிரச்சினைகள்:

நாட்டுக்கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் பெரும்பாலும் உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோருக்கு நேரிடையாக விற்பனை செய்யப்படுவதில்லை. மேலும் சிறிய பண்ணையாளர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை மதிப்பூட்டம் செய்வதில் அதிக நாட்டம் கொள்வதில்லை. எனவே உற்பத்தியாளர்கள் முகவர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் மூலமாக இறைச்சி மற்றும் முட்டைகளை விற்பனை செய்வதால் லாப விகிதம் குறைவாக காணப்படுகிறது. கிராமப்புறங்களில் விற்கப்படும் விலையைக் காட்டிலும் நகர்புறங்களில் நாட்டுக்கோழிகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இறைச்சி மற்றும் முட்டைகளை பண்ணையாளர்கள் நேரடியாக நகர்ப்புறங்களில் விற்பனை செய்வது இல்லை. மேலும் கோழிகள் அடைத்து வைத்து வளர்க்கும் போது ஒன்னையொன்று கொத்துதல் மற்றும் மூக்கு வெட்டப்பட்ட கோழிகள் ஆகியவற்றை விற்கும்போது சற்று சிரமமாக உள்ளது அவ்வாறே விற்கப்பட்டாலும் அதை கலப்பின கோழிகள் என்று கூறி மிகவும் குறைந்த விலைக்கு மொத்த வியாபாரிகள் எடுத்து செல்கின்றனர். எனவே இப்பிரச்சனையை தீர்க்க இறைச்சிக் கோழிகளுக்கு உள்ளது போல் விலை நிர்ணயம் செய்ய ஒருங்கினைப்பு குழு அமைக்கப்பட்டு நேரடியாக விற்பனை செய்தால் பண்ணையாளர்கள் அதிக லாபத்தை பெற இயலும்.

6. கழுகு மற்றும் நாய்களுக்கு கோழிக் குஞ்சுகள் இரையாகுதல்:

புறக்கடையில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிக் குஞ்சுகள் நோயினால் இறப்பதைக் காட்டிலும் ஊர்வன மற்றும் பறக்கும் பிராணிகளின் மூலமாக அதிக இழப்பினை சந்திக்க நேரிடுகிறது. சில பண்ணையாளர்கள் அடைக்கோழி மற்றும் குஞ்சுகளை ஒரு மாதம் வரை வெளியில் மேய்ச்சலுக்கு விடாமல் ஒரு கூண்டில் அடைத்து கோழிக்குஞ்சுகளின் இறகுகள் முதிர்ச்சி அடைந்தவுடன் மேய்ச்சலுக்கு அனுப்புகின்றனர். கினிக்கோழி மற்றும் வான்கோழிகளுடன் சேர்ந்து கோழிகளை மேய்ச்சலுக்கு அனுப்பும் பொழுது நாய்கள் மற்றும் கீரிகள் வந்தால், அவைகள் எழுப்பும் சத்தத்தைக் கொண்டு நாய்கள் மற்றும் கீரிகளின் வருகையை கண்டறியலாம். பண்ணையைச்சுற்றி கோழிகள் மேயும் இடத்தை அடைத்து வேலியும் மற்றும் திறந்த வெளிப் பகுதியை மேலே கம்பி வலை அமைத்தும் பாதுகாக்கலாம்.

7. குறைந்த உற்பத்தி திறன்:

நாட்டுக் கோழிகளின் அடைகாக்கும் குணம், மரபியல் குணாதியசங்கள் மற்றும் முட்டையிடும் காலங்களில் ஏற்படும் இடைவெளியின் காரணமாக குறைந்த அளவிலான முட்டைகள் மற்றும் குஞ்சுகளையே பெற முடியும். அதிக உற்பத்தி திறன் கொண்ட புறக்கடை வளர்ப்புக்கென தரம் உயர்த்தப்பட்ட நாட்டுக்கோழிகள் முறையே நந்தனம் கோழிகள் ஐஇ ஐஐஇ ஐஐஐ மற்றும் நாமக்கல் கோழி இனம் ஐஇ வனராஜா, கிரிராஜா கோழிகள் விற்பனை

செய்யப்படுகிறது. இந்த வகை நாட்டுக்கோழிகள் அதிக எடை மற்றும் அதிக முட்டையிடும் திறன் கொண்டது. எனவே மேலே குறிப்பிட்டுள்ள நாட்டுக்கோழிகளை வளர்ப்பதன் மூலம் நல்ல முறையில் விற்பனை செய்தால் மிகக் குறுகிய காலத்தில் அதிக லாபத்தை பெறலாம்

8. முட்டை சேகரித்தல் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை:

நாட்டுக் கோழிகளின் குஞ்சு பொரிக்கும் திறனானது இறைச்சி மற்றும் முட்டைக் கோழிகளை காட்டிலும் மிகவும் குறைவு. அதற்கு முக்கிய காரணமாக அமைவது சேகரித்த முட்டைகளின் சேமிப்பு குறைபாடே ஆகும். கிராமபுறங்களில் இன்றளவும் அடை முட்டைகளை அரிசி மற்றும் உப்புகளில் சேமிப்பு வைப்பதால் அதன் குஞ்சு பொரிக்கும் திறன் குறைகிறது. அடை முட்டையை சேமிக்க வீட்டின் ஒரு மூலையில் மணல் குவித்து அகன்ற வாயுடைய மண் பானையில் உமியைப் போதியளவு நிரப்பி முட்டைகளை அடுக்க வேண்டும். பானையின் அகன்ற வாயினை மெல்லிய துணி கொண்டு கட்ட வேண்டும். அவ்வப்பொழுது பானை மீது குளிர்ந்த நீரைத் தெளித்துப் பாதுகாத்து வந்தால் குஞ்சு பொரிக்கும் திறன் அதிகரிக்கும். குஞ்சு உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படும் முட்டைகளை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து குளிர்ச்சியான சூழலில் வைத்து பாதுகாத்தால் 7 – 10 நாட்கள் வரை சேமித்து வைக்கலாம். மேலே குறிப்பிட்டவாறு முட்டைகளை சேகரித்து பராமரிப்பதன் முலம் குஞ்சு பொரிக்கும் திறனை அதிகப்படுத்தலாம்.

9. அதிக அளவிலான தோல் முட்டை உருவாகுதல்

கோழிகள் தொடர்ந்து முட்டையிட கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்து மிக முக்கியம். அரிசியை மட்டும் தீவனமாக கோழிகளுக்கு போடும்பொழுது சுண்ணாம்பு சத்து குறைபாடு ஏற்பட்டு ஓடு இல்லாத தோல் முட்டைகளை கோழிகள் இடும். அதனை தடுக்க சிப்பி தூளை சமச்சீர் தீவனத்தில் கலந்து கொடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு குறைந்தது 5 - 8 கிராம் உடைந்த சிப்பி ஓடுகளை (சுண்ணாம்பு சத்து) தீவனத்துடன் சேர்த்து கொடுக்கும் பொழுது தோல் முட்டைகளின் விழுக்காடு குறையும்.

10. நாட்டுக்கோழி பராமரிப்பு விழிப்புணர்வின்மை

பண்ணையாளர்கள் நாட்டுக்கோழியை நீண்ட காலமாக வளர்த்து வந்தாலும் அவற்றின் இளம் குஞ்சுகள் பராமரிப்பு, தீவன பராமரிப்பு, தடுப்பூசியின் முக்கியத்துவம் மற்றும் நோய் தடுப்பு மற்றும் மேலாண்மை முறைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக காணப்படுகிறது. அவற்றை நிவர்த்தி செய்யும் விதமாக, சந்தேகங்கள் ஏற்படும் போது அருகில் கால்நடை பல்கலைக் கழகப் பயிற்சி மையங்களை நாடி நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

11. இதர பிரச்சனைகள்

1. புறக்கடை நாட்டுக்கோழிகள் வளர்ப்பதால் அருகாமையில் உள்ள விளை நிலங்களை சற்று சேதப்படுத்துவதாலும், கோழி எச்சத்தின் துர் நாற்றம் மற்றும் அதன் புழுதிகளாலும் அருகாமையில் உள்ளவர்களுடன் சிறிய சண்டை சச்சரவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.
2. சிறிய பண்ணையாளர்கள் ஊருக்கு வெளிப்புறத்தில் கோழி வளர்ப்பதால் அதற்கென தனியாக மின்சார இணைப்பு பெற வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. சிறிய அளவில் கோழி வளர்ப்புக்கு அதிக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.
3. பருவ நிலை மாற்றங்களும் நாட்டுக்கோழி வளர்ப்பை பாதிக்கக்கூடிய ஒரு காரணியாகும்.

மேற்கூறிய காரணிகள் அனைத்தும் நிவர்த்தி செய்யக்கூடியவை. இவைகளை களைந்து நாட்டுக்கோழிகளை வளர்த்தால் லாபகரமாக பண்ணையை நடத்திச் செல்ல முடியும்.